மத்திய அரசு இதற்கு ஏதாவது உதவி செய்கிறதா? இல்லை என்றால் அதை நல்ல முறையில் ஒரு நகரியமாக்குவதற்கு நம் அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கேட்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் மத்திய அரசிடத்திலிருந்து சுயாட்சி எதிர்பார்க்கிற அரசு இதை எதிர் பார்க்கவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: வருங்காலத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களின் தொகுதியாகப் போகிறது என்ற காரணத்தினால் இவ்வளவு தனி அக்கறை காட்டப்படுகிறது பூம்புகார் குறித்து. மத்திய அரசிடமிருந்து உதவி எதுவும் எதிர்பார்க்காது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதுவுமே நீங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கியது கிடையாதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாஞ்சாலங்குறிச்சியில் கூட கட்டபொம்மனுக்காக கோட்டை கட்டப்பட்டு நகர் அழகு படுத்தப்பட்டது. பூம்புகாரில் மீனவர்களுக்காக குடில்கள் அமைக்கப்படுவதுபோல் அங்கும் கட்டபொம்மன் வாரிசுகளுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அங்கே நான் நிற்கப் போவதாக அம்மையார் அவர்கள் கருதிக் கொள்வதா? எங்கேயோ ஒரு இடத்தில் தமிழ் நாட்டில் நிற்பேன். அவ்வளவுதான்.

ஆலயங்களில் நுழைவுக் கட்டணம்.

*63 வினா—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எந்தெந்த ஆலயங்களில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அவையில் இதுபற்றி அறிக்கை * ஒன்று வைக்கப்படுகின்றது.

திரு. கோ. இளங்கோவன்: சில ஆலயங்களில் நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அதை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

---

* 156-158-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1975 அக்டோபர் 25]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 1-4-1975-ல் இருந்து நுழைவுக் கட்டணங்கள் வசூலிப்பது கூடாது என்று உத்தரவிடப் பட்டு, தற்போது நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதில்லை. விழாக் காலங்களில் விசேஷ நுழைவு வாயில் வைத்திருக்கக்கூடிய ஆலயங்கள் தவிர மற்ற எந்த ஆலயங்களிலும் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: விசேஷ நுழைவு வாயில் என்று சொல்கிறார்கள். அதன் வழி உள்ளே போய்தான் சாமியைப் பார்க்க முடியும். எந்தக் கோவில்களானாலும் பக்தர்கள் சென்று சாதாரண காலங்களில் சாமி கும்பிட கட்டணம் வசூலிக்கக் கூடாது என்ற கொள்கையை சர்க்கார் அமல்படுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: விசேஷ நுழைவு வாயில் என்றால் கட்டணம் செலுத்துவோர் சில பேர் சௌகரியமாக நெருக்கடி இல்லாமல் செல்வதற்காக வசதியாக வைத்திருக்கக் கூடிய ஒரு இடம். அம்மையார் அவர்கள் பல கோவில்களுக்குச் சென்றிருக்கிறார்கள். பல கோவில்களில் அறங்காவலராக இருந்து பழக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்களுக்கு இந்த விசேஷ நுழைவு வாயிலைப்பற்றி தெரியாமல் இருப்பது எனக்குப் புரிய வில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படியெல்லாம் இருந்ததால் தான் இன்று கோவில்கள் எப்படிப் போய்க் கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றிச் சொல்கிறேன். விசேஷ நுழைவு வாயில் வைத்து விசேஷ காலங்களில் அல்லது திருவிழாக் காலங்களில் கூட்டம் இருக்கும்போது நுழைவுச் சீட்டு என்று வைத்து பணம் வாங்கலாமே தவிர சாதாரண காலங்களில் விசேஷ நுழைவு வாயில் வைத்து கட்டணம் வசூலிக்கக் கூடாது. போகிற பக்தர்களுக்கு வசதியிருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் கேள்வி கேட்கவில்லை. நீங்கள் ஏன் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. கோவை செழியன்: அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது, வரிசையில் நிற்காமல் வசதியாகப் போய்ப் பார்த்து வர விசேஷ நுழைவு வாயில் வழி செல்வதற்கு கட்டணம் வசூலிக்கப் படுவதாகச் சொன்னார்கள். ஆண்டவனைப் பொறுத்தவரையில் பக்தர்கள் எல்லோரும் அவருக்கு குழந்தைகள். ஆண்டவன் முன் எல்லோரும் சமமே. ஆண்டவன் முன்னால் வசதியுள்ளவர்களும் வசதியற்றவர்களும் எல்லோரும் சமம்தான். ஆண்டவனை பார்க்க வருகிறவர்கள் கியூவில் நிற்கிறார்கள். நுழைவுக் கட்டணம் செலுத்தி முன்னதாகப் பார்த்துவிட்டுச் செல்கிறார்கள் என்றால், ஆண்டவனிடம் கூட பொதுவுடமையைப் புகுத்தவில்லை என்றால் எப்போது புகுத்துவது? க்யூவில் நிற்காமல் லஞ்சம் கொடுத்து சிலர் ஆண்டவனை முன்பாகவே பார்த்துவிட்டுப் போகிறார்கள். இப்படி ஆண்டவனைப் பார்க்க லஞ்சம் தருகிறவர்களை இந்த மிஸா சட்டத்தின் கீழ் பிடித்து உள்ளே போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நெருக்கடியில் சென்று ஆண்டவனைப் பார்த்தால் அதனால் அனுகூலங்கள் இருக்குமென்று சொன்னால் தாராளமாக நெருக்கிப் போக வசதி செய்யப்பட்டிருக் கிறது. தனி நுழைவு வாயில் வழி அல்லாமல் நெருக்கிச் சென்றால் பிரயோஜனம் உண்டு என்று சொன்னால் தாராளமாக நெருக்கிச் செல்லலாம்.

திரு. கு. காமாட்சி: பகுத்தறிவுப் பிரச்சாரம் இல்லாத காலத்தில் சொர்க்கத்திற்கு டிக்கட் கொடுக்கப்பட்டதாக கதை எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுகூட ஸ்ரீரங்கம் போன்ற பகுதிகளில் சொர்க்கத்திற்கு டிக்கட்டுகள் தரப்படு கின்றன. அதாவது, சொர்க்க வாசல் டிக்கட்ஸ். அதை மாற்றி யமைப்பதற்கு அரசு முன்வருமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தத் தொகுதி உறுப்பினர் அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விளக்கமாகச் சொன்னால் தேவலாம்.